# சங்க இலக்கியத்தில் இருபாலர் விளையாட்டுகள்
## *IN SANGAM LITERATURE, THERE ARE GAMES PLAYED BY BOTH MEN AND WOMEN.*

**ஜாக்குலின். செ.த**
*இணைப் பேராசிரியர் (ம) துறைத்தலைவர்,*
*அகராதியியல் துறை,*
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்-613010.*
*மின்னஞ்சல்:stjaquline@gmail.com*

**முன்னுரை**

*சிறுவர்களுக்கு மனமகிழ்ச்சியையும், உற்சாகத்தையும், உடல் வலிமையையும், புத்துணர்வையும் கொடுப்பது விளையாட்டு. பொழுது போக்காக அல்லாமல் உடல் நலம், மன நலம் என்ற வகையில் மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவது விளையாட்டு. சங்க காலத்தில் இருபாலர் விளையாட்டுகள் விளையாடப்பட்ட செய்திகளைச் சங்கப் பாடல்கள் தெளிவுபடுத்துகின்றன.அந்த வகையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் இருபாலர் விளையாட்டுகள் குறித்த செய்திகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

**திறவுச்சொற்கள்**

**தமிழ் இலக்கியம், சங்க்க இலக்கியம், விளையாட்டு, இருபாலர் விளையாட்டு**

***Abstrct***

*Games provide children with happiness, enthusiasm, physical strength, and freshness. Unlike mere pastimes, games naturally engage in activities that promote physical and mental well-being, bringing joy. Sangam literature reveals that games played by both genders were prevalent during the Sangam period. This paper aims to explore the information available in Sangam literature regarding games played by both genders.*

*Keywords*

***Tamil Literature, Sangha Literature, Sports, Bisexual Sports***

**அசதியாடல்**

தனித்தும் ஓரிருவரைத் தனக்கு துணையாகவும் சேர்த்துக் கொண்டும் விளையாடுவது அசதியாடல் ஆகும்.ஆண், பெண் இருபாலரும் ஒருவருக்கொருவர் வேடிக்கையாகப் பேசிக் கொண்டும் பரிகாசித்துக் கொண்டும் பொய்யாயினவற்றைச் செய்துக் காட்டியும் பொழுதுப்போக்கிற்காக மகிழ்ந்தும் விளையாடியுள்ளனர். தற்காலத் தமிழ்ச் சொற்களஞ்சியம் பரிகாசித்தல் என்பதற்குப் பரிகாசம் செய்தல், கேலி செய்தல், கிண்டல் செய்தல், நையாண்டி செய்தல் என்ற நான்குப் பொருளைத் தருகிறது. ***(தற்காலத் தமிழ் சொற்களஞ்சியம், ப. 260)***

இவ்விளையாட்டைச் சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் குறிப்பாக கூனி, குறளன், விதூடகன் போன்றோரும் விளையாடியுள்ளனர்.மேலும், அரசன்.அரசி, அமைச்சன் ஆகியோரும் தமக்குள் அசதியாடி விளையாடி மகிழ்ந்துள்ளனர். நெஞ்சொடு தனக்கு மட்டுமே கேட்பதாகப் பாடுவதும், பேசிப் பரிகாசம் செய்வதும், அடுத்தவர் காதுபடக் கூறுவதும் கற்பனை மிகுபட அந்தந்த இடத்திற்கும் நிகழ்ச்சிகளுக்குத் தக்கவாறு பேசி சிரிப்பதும் போன்றவை இவ்விளையாட்டின் செயலாகின்றன. இவ்விளையாட்டு பகலிலும், முன்னிரவுப் பொழுதிலும்நடைபெற்றுள்ளது.

***”வல்லுப் பலகை யெடுத்து நிறுத்தன்ன***
***கல்லாக் குறள! கடும்பகல் வந்தெம்மை***
***இல்லந்து வாவென மெய்கொளீஇ யெல்லாநின்***
***பெண்டிருளர் மன்னோ கூறு?" (கலித். 94: 13 -16)***

என்ற கலித்தொகை பாடலடிகளும்,

***"மக்கள் முரியே ட நீ மாறினத் தொக்க***
***மரக்கோட்ட சேர்ந்தெழுந்த பூங்கொடி போல***
***நிரப்பமில் யாக்கை தழி இயினர் எம்மைப்***

***புரப்பேமென் பலரால்: பரலாற் பரத்தையென்***
***பக்கத்துப் புல்லீயா யென்னுமால் தொக்க***
***உழுந்தினும் துவ்வா குறுவட்டா! நின்னின்***
***இழந்ததோ கூனின் பிறப்புப்"*** *(கலி. 94: 22-28)*

இவ்விளையாட்டிற்குரிய சான்றுகளாகும்.

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு இவ்விளையாட்டு தொடர்ந்து நடைபெற்றதென்பதைக் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் தெரிவிக்கின்றன.

***"நின்மா னாக்கியரேம் ஆயினெ மினியென***
***அசதியாடிய மைதவழ் கண்ணி"*** *(பெருங் 15: 16-17)*

என்று பெருங்கதையடிகள் சுட்டுகின்றது.

இவ்விளையாட்டு இன்றும் காணப்படுகின்றது, திருமணம் தொடர்பான நிகழ்ச்சியில் இளைஞர்கள் பங்கேற்கும் பொழுது இது நிகழ்கின்றது.

**அம்புலி காட்டல்**

வானத்திலுள்ள நிலவைக் குழந்தைகளுக்குச் சுட்டிக் காட்டி அதன் அழகுப் பற்றிக் கூறுதலும், நிலவைப் பூமிக்கு இறங்கி வந்து குழந்தையுடன் விளையாட வேண்டுமாறு பொழுது போக்காக விளையாடுவதும் அம்புலிகாட்டல் ஆகும். இவ்விளையாட்டை மரபாக சங்க காலத்திலும் விளையாடியுள்ளனர். குறிப்பாக முன்னிரவுப் பொழுதினில் ஆண், பெண் என்ற இருபால் குழந்தைகளிடமும் பெரியவர்கள் அம்புலிக் காட்டி பொழுதுபோக்கி மகிழ்ந்து விளையாடியதை,

***"ஐய! திங்கம் குழவி வருக ! என யான் நின்னை***
***அம்புலி காட்டல் இனிது"*** *(கலி. 80: 18-19)*

என்று கலித்தொகைப் பாடல் சுட்டுகின்றது.

சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டு 'அம்புலி அழைத்தல்' என்று சிறப்பித்து விளையாடப்பட்டுள்ளன என்பதைக் காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இவ்விளையாட்டு இக்காலத்திலும் பள்ளிகளிலும், வீடுகளிலும் அம்புலிகாட்டல், அம்புலி அழைத்தல் என்று சிறுகுழந்தைகளுக்கு விளக்கப்படும் விளையாட்டு நிகழ்ச்சியாக உள்ளது.

**அலவன் ஆட்டல்**

கடற்கரைப் பகுதி, நீர் தேங்கும் பகுதிகளில் கரையை நோக்கி வரும் அலவன்களை (நண்டுகளை) அலைத்து ஆட்டி மகிழ்ந்து விளையாடுவது அலவன் ஆட்டம் ஆகும்.சங்க காலத்தில் ஆடவரும், பெண்டிரும் கடற்கரையில் நீர் படிந்த மணல் பகுதிகளில் கரையை நோக்கி வரும் அலவன்களைக் கைகளால் பிடித்து ஆட்டியும் மோதவிட்டும் விளையாடினர். பகல் பொழுதிலும் நிலாக் கால முன்னிரவுப் பொழுதிலும் நெய்தல் நிலத்து மக்கள் பொழுதுப் போக்காக மகிழ்ந்து விளையாடுதல் அலவன் நெய்தல் நிலத்து மக்களின் அன்றாட வாழ்வில் சிறப்பிடம் பெற்றதாக அமைகின்றது.

**"மாசுபோகப் புனல் படிந்தும்**
**அலவன் ஆட்டியும்"** ***(பட்டின. 100-101)***
**"அலவன் ஆட்டு வோள் சிலம்பு ஞெமிர்ந்து எனவே"**
***(நற்.363:7)***
**"பொன்வரி அலவன் ஆட்டிய ஞான்றே!"** ***(குறு. 303:7)***
**"திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி"*(அகம். 280:3)***

ஆகிய பாடலடிகள் இவ்விளையாட்டு இருந்தமைக்கு சான்றுகளாகும்.

சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டு இருந்ததை,

**"புணர்து துணையோடு ஆடமூ பொறி அலவன் நோக்கி**
**பொறி அலவன் நோக்கு"** ***(சிலம்பு. 7:31)***

என்ற சிலப்பதிகார அடி மூலம் அறியலாம்.

**உலாவல்**

நிதானமாக நடப்பதும் தனித்து நடப்பதும் மகிழ்வாக சிற்றடி எடுத்து வைப்பதும் என்று வீட்டிலும் வெளியிலுமாக பொழுதுபோக்கிற்காக உலாவுதல் உலாவலாகும்.சங்க காலத்தில் ஆயரும், பெண்டிரும் விடியற் காலையிலும், மாலையிலும், முன்னிரவு பொழுதிலும், வீட்டின் நிலா முற்றத்திலும் பின்புறத்திலும் வெளிப்புறச்சோலைகளிலும், கடற்கரை மணலிலும் பொழுது போக்காக உலாவி மகிழ்ந்து விளைடியுள்ளனர். உலவும் போது பெரும்பாலும் அதில் அணிகளை அணிந்து கொள்வதில்லை. உலாவுவதற்கான உலாவல் அமைக்கப்பட்டு இருந்தன என இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

***"அணங்குவீழ் வன்ன பூந்தொடி மகளிர்***
***மணங்கமழ் நாற்றந் தெருவுடன் கமழ***
***வொண்குழை திகழ மொளிகெழு திருமுகந்***
***தின்கா ழேற்ற வியலிருவிலோதந்***
***தென்கடற் றிரையி னசைவளி புடைப்ப***
***நிரைநிலை மாடத் திரமிலந் தோறும்***
***மழைமாய் மதியான் தோன்றுபு மறைய"***
***(மது.க.466-452)***

சங்க காலத்திற்குப் பின்னரும் மக்கள் உலாவி மகிழ்ந்துள்ளனர். என்பதைக் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. இவற்றை, மாதர்கள் மைந்தர் வாவிதாவில் உலாவி மகிழ்ந்தனர் என்ற சீவக சிந்தாமணியடிகளால் அறியலாம். உலாவும் பெண்கள் சிலவாகிய அணிகலன்களை அணிந்துக் கொண்டு உலாவியதை,

***"சீர்ப்புண் களைந்த சில்லென் கோலமொடு***
***நிலா வெண் முற்றத்துலாவி யாடி" (பெரும் 54:23-24)***

என்று பெருங்கதை வரிகள் குறிப்பிடுகின்றது.இக்காலத்திலும் இவ்விளையாட்டுப் பொழுது போக்குக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் விளையாடப்படுகிறது.

**ஊசல்**

மரத்தின் கிளையில் கயிற்றினைக் கொண்டு கட்டப்பட்டஊசலில் அமர்த்து ஆடிமகிழ்வது. சங்க கால மகளிர் பெரிய மரக்கிளைகளில்

கயிற்றினைக் கொண்டு கட்டப்பட்ட பலகையில் மீது அமர்ந்துக் கொண்டு இரு கைகளாலும் கையிற்றினைப் பிடித்துக் கொண்டு கால்களால் பூமியை உதைத்தவாறு முன்னும் பின்னுமாக வேகமாக ஆடுகையில், கயிற்றில் மிதப்பது போன்ற உணர்வுஏற்படும் ஆகையினால் இவ்விளையாட்டினை விரும்பி ஆடி மகிழ்ந்துள்ளன. இவ்விளையாட்டில் பெண்கள் மட்டுமே ஈடுபட்டாலும் சில நேரங்களில் ஆண்களும் ஈடுபட்டு விளையாடியுள்ளனர்.ஊஞ்சல் நிலச் சூழலுக்கு ஏற்ப செல்வ நிலைக்கு ஏற்றாற் போலவும் அமைந்துள்ளனர். ஊஞ்சல் விளையாட்டிற்கான கருவிகளைத் தங்கள் வாழிடங்களுக்கேற்ற பொருட்களின் துணைக் கொண்டும் அமைத்துள்ளனர்.

நெய்தல் நில மகளிர் ஞாழல் மரக்கிளையில் தாழை விழுதால் கட்டிய ஊசலிலும் சுறாமீன் கொம்பாலாகிய பலகையில் தாழை விழுதாலாகிய கயிற்றினைக் கொண்டு அமைக்கப்பட்ட ஊசலிலும் விளையாடியுள்ளனர்.மேலும், செல்வநிலையில் உள்ளவர்களின் வீட்டினுள் அமைக்கப்பட்டிருக்கும் ஊஞ்சல் பலகை வேலைப்பாடுகளை உடையதாய் இருந்துள்ளன. சங்கிலியால் இணைத்துக் கட்டப்பட்ட பலகைகளையும் ஊஞ்சல் விளையாட்டுக்குப் பயன்படுத்தியுள்ளனர்.

மகளிர் ஊஞ்சலாடும் போது மனம் மகிழ்வான நிலையில் பாடி மகிழ்ந்துள்ளனர். அந்நிலையில் பாடப்படும் பாடலை "ஊசல் வரி" எனவும் குறிப்பிடுவர். இவ்விளையாட்டுப் பகல் பொழுதினில் விளையாடப்பட்டுள்ளது.வீட்டுக்கு வெளியே சோலைகளிலும் இல்லத்தினுள்ளும் வீட்டு விளையாட்டாகவும் விளையாடப்பட்டுள்ளது.

***"ஊசல் ஊர்ந்து ஆட ஒருஞான்று வந்தானை"(கலி. 37:14)***
***"தணதாழை வீழ் ஊசல்" (கலி.131: 10-11)***
***வழிநார் ஊசலின் கோடை தூக்குதொறும்"(நற். 162: 10)***
***"தாழ்வி லோங்கு சினைந் தொடுத்த வீழ்வபூற்***
***றூகன் மாறிய மருங்கும் பாய்புடன்" (அகம் 38:7-8)***
***"ஓங்குசினைத் தொடுத்த ஊசல் பாம்பென (அகம். 686)***

என்ற அடிகளின் மூலம் அறியலாம்.

சங்க இலக்கியங்களுக்குப் பிறகும் இவ்விளையாட்டு மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களில் இடம் பெற்றுள்ளதை,

**"மடவோர்க் கியற்றிய மாமணியூசல்"** ***(மணி. 58: 75)***

**"மகளிராடும் ஊசல்"** ***(சீவ. சிந். 58: 2268)***

என்ற வரிகளால் அறியலாம்.

இவ்விளையாட்டு இன்றும் மழலைப் பள்ளிகளில் குழந்தைகளுக்குப் பயிற்சியாகவும் விளையாட்டாகவும் உள்ளன.

**எண்ணி விளையாடல்**

ஒன்று, இரண்டு, மூன்று என விரல் விட்டும் விரலால் சுட்டி எண்ணியும் விளையாடுவது எண்ணி விளையாடல் ஆகும். ஒரிடத்தில் அதிக எண்ணிக்கையில் பொருளைக் கண்டால் அவற்றை ஒன்று. இரண்டு, மூன்று என்றவாறு எண்ணி வியந்து பொழுது போக்குவது மாந்தரிடம் காணப்படும் பண்பாகும். சங்க காலத்தில் பெண்கள் பலர் கூடி நின்று சாலைகளில் வரும் உப்பு வண்டிகள், படகுகள், யானைகள், குதிரைகள் ஆகியவற்றைக் கண்டு எண்ணி மகிழ்ந்து பொழுது போக்கினர்.

**"உவர்விளை உப்பின் உழாஅ உழவர்**
**ஓகை உமணர் வருபத நோக்கிக்**
**கான லிட்ட காவற் குப்பைப்**
**புலவுமீன் உணங்கல் படுபுள் ஓட்டி**
**மடநோக்கு ஆயமொடு உடனுப்பு ஏறி**
**எந்தை திமிலிது நுந்தை திமிலென**
**வளைநீர் வேட்டம் போகிய கிளைஞர்**
**திண்திமில் என்னும் தண்கடற் சேர்ப்ப"** ***(நற். 331:1-8)***

சங்க இலக்கியங்களுக்குப் பிறகு இவ்விளையாட்டு தொடர்ந்து இருந்ததை,

**"வேறிகண் மாதரார்**
**பைங்கிளி முன்கைமேற் கொண்டு பார்ப்பெனும்**
**கொங்கலர் தாமரைக் கிடங்கு கூறுவாம்"** ***(சீவக. சிந். 58-94)***

என்ற வரிகளால் அறியலாம்.

மேலும், கிளிகளைத் தம் கைகளின் மீது வைத்துக் கொண்டிருந்த பெண்கள் தாமரைத் தடாகத்திலிருந்தப் பறவைக் குஞ்சுகளை எண்ணி மகிழ்ந்துள்ளனர். இவ்விளையாட்டுப் பகலிலும் இரவிலும் விளையாடப்பட்டுள்ளது.ஆண், பெண் இருவருமே விளையாட்டில் ஈடுபட்டு இருந்தாலும் பெண்கள் அதிகமாக பங்கேற்று விளையாடினர்.

**சுண்ண விளையாட்டு**

சுண்ணம் என்பது ஒரு வகை வாசனைப் பொடி, சங்க காலத்தில் இக்சுண்ணப் பொடியினைக் கொண்டு விளையாடியும் உள்ளனர். பலரும் கூட்டமாகச் சேர்ந்து சுண்ணப் பொடியினைக் கையில் வைத்துக் கொண்டு ஒருவர் மீது ஒருவர் தூவிக் கொண்டு மகிழ்ந்து விளையாடியுள்ளனர்.சுண்ணப்பொடியினைத் தயாரிப்பதில் பெண்கள் மிகுந்த ஈடுபாடுக் கொண்டு தயாரிக்கும் பொழுது தங்களது, திறமைகளையும் வெளிப்படுத்தியுள்ளனர்.இதற்கான போட்டி முறைகளும் காணப்பட்டுள்ளன.

***"புன்காயச் சுண்ணம் புடைத்த (பெரும். 221)***
***"பலர் தொகுபு இடித்த தாது உரு சுண்ணத்தார்" (மது.கா. 399)***
***"சுண்ண நீறு ஆடி" (கலி. 97: 10)***

ஆகிய வரிகளின் வழியே இவ்விளையாட்டினைப் பற்றி அறியலாம்.

சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டுத் தொடர்ந்ததை,

***"வண்ணமுஞ் சுண்ணமுந் தண்ணுறுஞ்***
***சாந்தரும்" (சிலம்பு. 13)***

என்ற சிலப்பதிகார அடிகள் மூலம் அறியலாம்.

இக்காலத்திலும் இவ்விளையாட்டு நடைமுறையில் உள்ளது. சுண்ணத் தயாரிப்பு ஒரு சிறுதொழிலாகவே வளர்ந்துள்ளது. வண்ணப் பொடிகளை கொண்டு வாசலில் கோலமிடுதல், ஒப்பனைக்குப் பயன்படுத்துதல் தண்ணீரில் கரைத்து மேலே தெளித்துக் கொண்டு விளையாடுதல் போன்றவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சூது**

சூதாட்ட ஆட்டம் பொழுது போக்குக்காக விளையாட்டப்படுவது காலப் போக்கில் பிறரைக் கெடுக்கும் மனப்பான்மையும் வளரத் தொடங்கியது. சங்க காலத்தினர் இவ்விளையாட்டை 'வல்லு விளையாடல்' என்றும் குறிப்பிட்டுள்ளனர்.ஆயம், கவறு, வட்டு, வல் என்றப் பொருட்களைக் கொண்டு உருட்டி விளையாடியுள்ளனர். இவ்விளையாட்டில் சில குறிப்பிட்ட சொற்களைக் கூறிக் கொண்டு விளையாடியுள்ளனர். பொழுதுப் போக்காக போவதே தெரியாமல் விளையாடிய விளையாட்டு பந்தய விளையாட்டாக மாறியது. இதற்கான பந்தயம் பொருளை மையமாக வைத்து விளையாடும் பொழுது வெற்றி பெறுபவருக்கே அப்பந்தயப் பொருள் உரிமையுடையதாகும்.

இவ்விளையாட்டில் போட்டி மனப்பான்மை ஏற்படுகிறது. சூதாட்டத்தில் தனக்கு ஒப்பார் இல்லையெனக் கூறுவது எதிர்த்து ஆடுவோரை வீழ்த்துவதாகக் கூறுவதும்.எவர் எதிர்த்தாலும் தானே வெல்லுவதாகக் கொடி உயர்த்துவதும் கொடிய எண்ணங்களாயின. இவ்விளையாட்டை ஆண்கள் விளையாடியுள்ளனர். காலப் போக்கில் பெண்களும் விளையாடலாயினர். இவ்விளையாட்டை பகல், இரவு என்று நேரம் கருதாமல் பொழுது போக்கி மகிழ்ந்து விளையாடியுள்ளனர். பொது இடங்களும், வீடுகளும் விளையாட்டுக் களமாக அமைந்தன. இவற்றைக் "கழகம்" என்று அழைத்துள்ளனர். சூதாடிய இடத்தினை ''ஓவாச் சூதுபொரு கழகம்'' என்று குறிப்புகளும் கிடைக்கின்றன.

பிறரை ஏமாற்றும் நோக்கிலும் விளையாடியுள்ளனர்.

***"பொதியில்
நரை மூதாளர் நாயிடக் குழிந்த
வல்வின் நல்லுயகம்" (புறம்.52:4-6)***

***"மன்றத்து
நரை மூதாளர் அதிர் தலை யிறக்கிக்
கவை முனத் திருந்தும் வல்லு" (அகம். 377: 7 - 9)***

***"சூதார் குறுந்தொடிச் சூரமை
நுடக்கத்து" (ஐங். 71:1)***

ஆகியவை சான்றுகளாகும்.

*சங்க காலத்திற்குப் பின்னரும் மக்களால் விரும்பி ஆடப்பட்டதைக் காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் குறிப்பிடப்படுகின்றன.*

***"வல்லாடாய்த்து மண்ணர சீழந்து" (சிலம்பு. 21:50)***

*என்பது சிலப்பதிகாரம்.*

***"சூது உந்தலின் பொழுதுபோம் சிலர்க்கு"***

*என்பது கம்பராமாயணமும் கூறுகின்றன.*

**நீர் விளையாட்டு**

*நீரில் நீச்சலடித்து மகிழ்ந்து பொழுது போக்குக்காகவும் வெற்றிப் பெற வேண்டுமென்றும் விளையாடுவது இவ்விளையாட்டாகும்.சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் ஆறுகள், குளங்கள் போன்ற நீர் நிலைகளில் நீச்சலடித்தும், தான் கற்ற வித்தைகளைக் காட்டியும் படகுகளைப் பயன்படுத்தியும் மகிழ்ந்து பொழுதுபோக்காக விளையாடியுள்ளனர். மேலும் நீர் விளையாட்டை ஒரு விழாவாகப் பலரும் வேடிக்கைப் பார்க்கும் வகையில் விளையாடி அதில் வெற்றிப் பெறுவோர்க்குப் பரிசுகளும் பாராட்டுக்களும் கொடுத்து ஊக்கப்படுத்தியுள்ளனர். பகல் பொழுதில் விளையாடி மகிழ்ந்துள்ளனர்.*

*சில நேரங்களில் ஆடவருடன், பரத்தையருடனும் புனலாடி மகிழ்ந்துள்ளனர்.*

***"மலி புனல் நிகழ்தரும் தீம் நீர் விழாலின்"(பதிற். 48:14) "***
***இறுவரை யுரையுமாறு இருகரை ஏமந்து***
***வரைபுரை உருவின் நுரைபல சுமந்து***
***பூ வேந்து பொழில் பரந்து***
***துணைந்து ஆடுவார் ஆய் கோதையர்" (பரிப். 7:40 - 43)***
***"அறம் காவற் பெண்டிர்***
***மணி அணிந்த தம் உரிமை மைத்தரோடு ஆடித்***
***தணிவின்றி, வையைப்புனல்" (பரிப். 48 - 50)***

*ஆகியவை இவ்விளையாட்டின் சான்றுகளாகும்.*

சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்து விளையாடியதைக் காப்பியங்களும், சிற்றிலக்கியங்களும் குறிப்பிடுகின்றன.நீர் விளையாட்டு ஒரு விழாவாக நடைப்பெற்றுள்ளது. அவற்றை 'நீரணிவிழவு' எனச் சிலப்பதிகாரம் கட்டுகின்றது. உயரமான மாடம் மீது ஏறி அங்கிருந்து பெண்கள் நீரில் பாய்ந்தும்.நீரில் இசைக் கருவிகளை இசைத்தும் விளையாடியதைப் பெருங்கதைக் குறிப்பிடுகின்றது.

இதைச் 'சல விளையாட்டு', 'மஞ்சனம் ஆடல்', 'ஆய விளையாட்டு' என்ற பெயர்களில் அழைக்கின்றனர். ஆற்றோரம் இருந்த நகர மக்களெல்லாம் ஆண்டுதோறும் ஆற்றில் புது வெள்ளம் வந்தவுடன் ஒரு பகற்பொழுதில் வெள்ளத்தில் திளைத்தாடி இன்புற்று விளையாடுவர். கிளை புனலாட்டு என்றும் கூறுவர்.

**பந்து**

உருண்டை வடிவமுள்ள விளையாட்டுக் கருவி பந்து எனப்படும். இப்பந்தைக் கைகளால் தூக்கிப் போட்டும், கோல் கொண்டு தட்டியும் விளையாடுகின்றனர். சங்க காலத்தில் கூட்டமாகவும், சேர்ந்து பொழுதுபோக்கவும், போட்டி முறை வைத்தும், பந்தயம் கூறியும் விளையாடியுள்ளனர். இதற்காகப் பந்தெறிகளும், பந்தடி மேடையும் இருந்துள்ளது. இப்பந்து பூவினால் ஆக்கப்பட்டும் நூலினால் வரிந்து கட்டப்பட்டும் காணப்பட்டது. மேலும், வீடுகளிலும் மேல் மட்டத்திலும், வெளிப்புறமான பொது இடங்களிலும் மாலை நேரங்களிலும் பொழுது போக்காக விளையாடியுள்ளனர். இவ்வாறு விளையாடும் பொழுது பாடல்கள் பாடிக் கொண்டும் விளையாடி மகிழ்ந்துள்ளனர்.

***"வரிப்புனை பந்தொடு பாவை தூங்க"***

***(திருமுரு. 68)***

***"நெடுந்தேர் வழங்கும் நிலவுமணல் முற்றத்துப்***
***"பந்தொடு பெயரும் பரிவி லாட்டி"*** ***(நற். 140:6-7)***
***"பந்து நிலத்து எறிந்து பாவை நீக்கி"*** ***(நற். 179:2)***

ஆகிய வரிகள் இவ்விளையாட்டிற்குச் சான்றுகளாகும்.

சங்க காலத்திற்குப் பின் மிகச் சிறப்பாக விளையாடப்பட்டுள்ளதைக் காப்பியங்கள் குறிப்பிடுகின்றன.

***"செம் பொன் செய்த வரிப்பந்து"***
***"பஞ்சுடைப் பந்து பூப்பந்து"***

என்ற பகுதிகளால் பந்துச் செய்யப்பட்ட வகைகளைப் பெருங்கதைப் புலப்படுத்துகின்றது. சிலப்பதிகாரத்தில் கந்தகம், கந்து என்னும் சொற்களால் பந்தைக் காப்பியங்கள் குறிப்பிட்டுள்ளன என்பதைக் கந்துகவரி என்ற பகுதிகளில் காணமுடிகின்றது.மேலும், இருபத்தொரு பந்துகளைப் பயன்படுத்தி "எண்ணாயிரம் கை" பந்தடித்த மானனீகை என்ற பெண்ணைச் சீவகசிந்தாமணி குறிப்பிடுகின்றது.இக்காலத்தில் இவ்விளையாட்டு சில மாற்றங்கள் பெற்று காணப்படுகின்றது.

சிறுவர்கள் விளையாடும் விளையாட்டைப் 'போர் பந்து', 'குழிப்பந்து', 'பிள்ளையார் பந்து' எனவும் குறிப்பர். குழிப்பந்து, பிள்ளையார் பந்து போன்ற விளையாட்டுகளில் விளையாடும் பொழுது பந்து வாய்த்தால். நமக்கு, வாய்க்காவிட்டால் பிள்ளையார்க்கு எனக்கூறி விளையாடி மகிழ்வர்.

**பறவைகளைக் காணலும் அவற்றின் செயல்கள் போல செய்தலும்**

பறவைகளைக் காண்பதற்காக வெளியிடங்களுக்குச் சென்று தேடிக் கண்டுபிடித்து அவற்றின் செயல் போல் செய்து மகிழ்வது சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் வெளியிடங்களில் காணும் பறவைகளைக் கண்டு அவற்றின் செயல்களைப் போல செய்து மகிழ்ந்தனர். குறிப்பாகக் கிளி, மயில், குயில் போன்ற பறவைகளின் செயல்களைக் கண்டு அவற்றைப் போன்று செய்து மகிழ்ந்தனர். பெண்கள் கிளியுடன் மழலை மொழி பேசியும் குயில் கூவும் பொழுது அவற்றைப் போன்று எதிர்கூவல் கூவியும் மயில் ஆடுவதைக் கண்டு ஆடியும் மகிழ்ந்து பொழுது போக்கினர்.

**"நறவுண் வண்டாய் நரம்பு ஊர்நரும்**
**சிகைமயிலாய்த் தோகை விரித்து ஆடுநரும்**
**கோகுலமாய்க் கூவுநரும்.**
**ஆகுலம் ஆடுநரும்"** ***(பரி. 9: 63-66)***

இவ்விளையாட்டு சங்க காலத்திற்குப் பின்னரும் தொடர்ந்ததைப் பெருங்கதைக் குறிப்பிடுகிறது.

மயில் கூட்டத்தின் அழகைக் கண்டும் ஆடலைக் கண்டும் பெண்கள் பொழுதுப் போக்கி மகிழ்ந்துள்ளதை,

***"மணிமயிற் பீலி மாமயிற் றொழுதி***
***அணிநல நோக்கிய மாடல் கண்டுவந்தும்"(பெருங்.2112:137-138)***

என்ற பெருங்கதை வரி குறிப்பிடுகின்றது.

இக்காலத்திலும் பறவைகள் போலச் செய்து காட்டுதல் வித்தையாகவும் திறமைகளை வெளிப்படுத்தும் நிகழ்ச்சியாகவும் வளர்ந்துள்ளது. சிறார் பள்ளிகளில் விளையாட்டாகவும் இசையுடன் சொல்லத் தரப்படுகிறது.

**பறவை - விலங்குகளுடன் விளையாடல்**

பறவை - விலங்குகளுடன் விளையாடுவது மரபாகத் தொடர்ந்து வரும் விளையாட்டுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. பெண்கள் மான் குட்டிகளுடனும், சிறுவர்கள் புலிக்குட்டிகள் மற்றும் யானைக் கன்றுகளுடனும் பொழுது போக்கியுள்ளனர்.யாரிடமும் சொல்ல முடியாத ரகசியங்களை விலங்கிடம் சொல்லி மனதில் உள்ள கனத்தைக் குறைத்துக் கொண்டனர். ஆகையால் மனிதர்களை நேசிப்பதை விட விலங்கு பறவைகளை நேசித்துள்ளனர்.இவ்விலங்குப் பறவைகளை விளையாடுதல் மூலம் மகிழ்ச்சி அமைவது மட்டுமல்லாமல் உயிரினும் இனிதாகக் கருதினர். இவ்விளையாட்டைப் பகல்பொழுதினில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகப் பொழுதுபோக்காக விளையாடி மகிழ்ந்துள்ளனர்.

***"சிறு குறும் பறவைக் கோடி***
***விரைவுடன்" (நற். 277:9)***
***"தாதுதேர் பறவையின் அருந்து இறல் கொடுக்குங்கால்"***
***(கலி. 22: 7)***

ஆகிய அடிகளின் மூலம் இவ்விளையாட்டை அறியலாம். சங்க காலத்திற்குப் பின்னரும் இவ்விளையாட்டுத் தொடர்ந்து விளையாடப்பட்டுள்ளதைப் பிற்கால இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. சான்றாக,

***"களிற்றோ டாடித் தொழுதகக்***
***கழிப்பர் வேந்தே" (சீவக சிந். 58:289)***

என்ற சீவக சிந்தாமணி அடியும் குறிப்பிடுகிறது.

**சங்க இலக்கிய ஆண்பாலர் விளையாட்டும், விளையாட்டுக் கருவிகளும்**

**ஏறுகோள்**

கூறிய கொம்புகளை உடைய எருதுகளைப் போர்க் கருவிகள் ஏதுமின்றித் தம் உயிரையும் பொருட்படுத்தாமல் தம் உடல் வலிமையால் அடர்ந்தும், ஊர்ந்தும் இளைஞர் அடக்கி மகிழ்ந்து விளையாடுவது.

**குதிரை ஏற்றமும் யானை ஏற்றமும்**

அரசர், வீரர் முதலியோர் யானை, நேர் போன்றவற்றைச் செலுத்தியும், ஊர்ந்து போர்ப் பயிற்சி செய்வது தொழிலாகவும் பொழுது போக்காகவும் அமைந்த இவை விளையாட்டாகவும் விளங்கியது.

**சாம விளையாட்டு**

சமமான கற்பனை பெயர்களை இட்டு ஆடும் விளையாட்டு.

**குறும்பு விளையாட்டு**

சிறுவர்கள்தனித்தும், கூட்டமாகவும் இணைந்து பல வகை ஓசைகளை எழுப்பிக் கொண்டும், கைத்தட்டிக் கொண்டும் ஆடி மகிழ்ந்து விளையாடினர்.

**சிறுதேர்**

சிறுதேரினைச் செய்து அவற்றை உருட்டி விளையாடுவது.

**சிறுபறை**

தோற்கருவி கையில் வைத்துக் கொண்டு அடித்து விளையாடும் பறை.

**மல்**

மெல்லிய இழையால் நெய்யப்பட்ட துணி.

**வட்டு**

உருண்டையான விளையாட்டுக் கருவி.எறிதல் முறையில் விளையாடப்படுகிறது.

**வில் விளையாட்டு** -

வில் வித்தை விளையாட்டு.

**வேட்டை**

வில், அம்பு, ஈட்டி

**பெண்பாலர் விளையாட்டு**

**எதிரொலி கேட்டல்**

ஆரவாரம் இல்லாத மலைப்பகுதிக்கு சென்று ஒலி எழுப்பி அந்த ஒலியே எதிரொலித்து கூறுவதை கேட்டு எதிரொலி கேட்டல் ஆகும்.

**கண் புதைத்து ஒளிந்தாடல்**

கண்களைப் பொத்திக் கொண்டு மறைந்திருப்பவர்களைக் கண்டுபிடித்து விளையாடுவது.

**கவண்**

புள் ஓட்டவும், போர் புரிவதற்காகவும், தற்காப்புக்காகவும் மாந்தர்க்குப் பயன்படும் ஒரு கருவி கவண் இதனைக் "கைகவண்" எனவும் குறிப்பிடுவர்.

MAHIZH

**குளிர்**

குளிர் என்பது சிறுவர்களுக்கான ஒரு விளையாட்டுக் கருவி குளிர் கருவியைச் சுற்றும் போது கடக் கடக் என ஓர் ஓசை உண்டாகும். அது சிறுவர்களுக்கு இன்பம் பயக்கும் சற்று பெரிதான வலிமையான குளிர் தினைப்புனம் காக்கும் மகளிர்க்கு ஓசையால் கிளிகளை விரட்ட உதவும் ஒரு கருவி, சங்க கால மகளிர் தினைப்புனம் காக்கும் போது தினைக்கதிர்களைக் கவர வரும் கிளிகளை ஓட்டக் குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்தினர்.

**தட்டை**

தட்டை என்பது ஒரு விளையாட்டுக் கருவி இதனைப் புடைக்கும் போது டப் டப் என ஒலி கேட்கும்.தட்டப்படும் கருவி தட்டை தட்டையைப் புடைத்து அதன் ஒலியை கேட்டு மகிழ்வது பிள்ளைகளுக்கு

மகிழ்வு தரும் விளையாட்டு. சங்க கால மகளிர் தினைப்புனம் காக்கும்போது தட்டை புடைத்துக் கிளிகளை ஓட்டியதாகச் சங்கப்பாடல்கள் குறிப்பிடுகின்றன.

**தட்டை செய்முறை**: ஒரு முழம் நீளமுள்ள தென்னை மட்டையைப் பிளந்து செய்யும் தட்டை ஒரு வகை. ஓரடி நீளமுள்ள வாழையிலை அடித்தண்டைப் பிளந்து செய்யும் தட்டை மற்றொரு வகையாகும்.

தென்னை மட்டையைப் பிளந்தும் தட்டை செய்துள்ளனர்.

***"அவ்வாய்த் தட்டையொடு அவனை ஆக!" (நற். 134:5)***

தழல் என்பது ஒரு விளையாட்டுக் கருவி.வளைந்து இசை எழுப்பும் கருவி சங்க காலத்தில் காதலன் தன் காதலிக்குத் தரும் விளையாட்டுக் கருவி இது. தழல், தட்டை குளிர், முறி என்பன அவன் தந்த விளையாட்டுப் பொருள்கள் என சங்க காலப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் தட்டை குளிர் ஆகியன விளையாட்டுப் பொருட்கள் என்பது வெளிப்படை, முறி என்பது காதலி உடுத்திக் கொள்ளக் காதலன் தந்ததழையாடை எனவும் கூறப்படுகிறது.தட்டையைத் தட்டிக் குறமகள் தினை கவரவரும் பறவைகளை ஓட்டினாள் எனக் கூறும் பாடல் தழலை வளைத்துப் பறவைகளை ஓட்டினாள் எனவும் குறிப்பிடுகிறது.'தழங்கு குரல்' என்னும் தொடர் இடி முழக்கத்தையும், முரசு முழக்கத்தையும், நாத் தழுதழுக்கும் பேச்சையும் உணர்த்துவதைச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன.

இவற்றால் 'தழங்கும் ஓசை எழுப்புவது தழல்' என்னும் கருவி என்னும் தெரியவருகிறது. ஆண்பால் பிள்ளைத்தமிழ் பாடல்களில் வரும் சிறுபறை போல இந்தத் தழல் மகளிர் முழக்கும் பறை என உணரமுடிகிறது. ஆண்டாள் முழங்கிய பன்ற இந்தக் கருத்தோட்டத்தில் நினைவுக்கு வருகிறது.

**முடிவுரை**

சங்க கால மக்களின் வாழ்க்கையிலும், பண்பாட்டிலும் விளையாட்டுக்கள் இரண்டறக் கலந்து காணப்படுவதைச் சங்க கால இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துக்காட்டி விளக்கப்பட்டுள்ளது. ஆயக்கலைகள் அறுபத்து நான்கில் விளையாட்டுகளும் இடம் பெற்றுள்ளன. அவை யானையேற்றம், குதிரையேற்றம், விற்போர்,

மற்போர் போன்றவையாகும். மன மகிழ்ச்சியாகச் செய்யக்கூடிய எளி அல்லது வேடிக்கையான செயல்களை விளையாட்டு என்கிறார் சு.சக்திவேல். உடல் உறுப்புகள் எல்லாவற்றிற்கும் தக்க பயிற்சி அளிக்க வேண்டும் என்று உணர்ந்த நம் முன்னோர் பலவகையான உடற்பயிற்சியிலும் ஈடுபட்டார்கள். ஆசனம், தண்டால், பஸ்கி போன்ற போர் விளையாட்டு, யானை ஏற்றம், தேர் ஏற்றம் போன்ற சவாரி விளையாட்டு, நீந்துதல் போன்ற நீர் விளையாட்டு முரட்டு காளையை அடக்குதல் போன்ற வீரவிளையாட்டு வேட்டையாதல் போன்ற விளையாட்டுக்களை விளையாடி மகிழ்ந்துள்ளனர். பந்து, கவண், பாவை, குளிர், தட்டை, ஊஞ்சல், கழற்காய் போன்ற பல விளையாட்டுக் கருவிகள் பயன்படுத்தி விளையாடியுள்ளனர்.ஆயின், கெடவரல், பண்ணை, ஓரை ஆகிய விளையாட்டு குறித்த சொற்கள் தொல்காப்பியர் காலத்திலிருந்தே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளதை அறியலாம்.

**துணைநூற் பட்டியல்**


1. *அறவாணன்.க.ப, தமிழ் சமுதாய வரலாறு, தமிழ்க்கோட்டம் வெளியீடு, புதுச்சேரி, 1994.*
2. *இராசமாணிக்கனார்.மா, தமிழர் நாகரீகமும் பண்பாடும், பாரிநிலையம், சென்னை, 1975.*
3. *இராமநாதன். ஆர், தமிழர்கலை இலக்கிய மரபுகள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1998.*
4. *இராசமாணிக்கனார்.மா, பத்துப்பாட்டு ஆராய்ச்சி, சாகித்திய அகாதமி, டில்லி, 2012.*